# $1\frac{3}{4}$ லட்சம் ரூபா வழங்க அரசு தயார்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 226

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 201

யாழ்ப்பாணம் ஆவணி 15 றஜப் 9 செவ்வாய்க்கிழமை (31-8-71)

## யாழ். ஆஸ்பத்திரியில் உதவி அமைச்சர்

குருநகர், திங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மூன்றரை லட்சம் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வெளிநோயாளர் சிகிச்சைநிலையத்திற்கான உத்தேச செலவில் அரைப்பங்கை ஆஸ்பத்திரிக் கமிட்டி பொதுமக்களிடம் சேகரிக்க முடியுமானால் மிகுதிப்பணத்தை அரசாங்கம் உடனடியாகவே வழங்க நடவடிக்கை எடுக்கும் என்று சுகாதார உதவி அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா ஆஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

உதவி அமைச்சர் திருமதி ஒபயசேகரா, சுகாதார சேவை உதவி டைரக்டர் டாக்டர் எம். மஹ்மூத் வடபகுதி சுகாதார அத்தியட்சகர் உட்பட ஆஸ்பத்திரிக்கமிட்டி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்ட இம்மாநாட்டில் ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புற்றுநோய் தடுப்பு சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதின் அவசியம் பற்றி அமைச்சர் குறிப்பிட்டுப் பேசுகையில் புற்றுநோய்

6-ம் பக்கம் பார்க்க

# மொழிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு யோசனை

## ஓய்வுபெற்றுவிட்டு வெளிநாடு செல்பவர்களைத் தடுக்க ஏற்பாடு

கொழும்பு, திங்கள் மொழிச் சட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர்கள் தம் பதவியிலிருந்து விலகிக் கொள்ள அனுமதிக்கும் ஷரத்தில் மாற்றம் செய்வது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

மொழிச் சட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டு 15 வருடங்கள் கழிந்தும் கூட வெளிநாடுகளில் பெரும் வருமானம் தரும் பதவிகளைப் பொறுப்பேற்பதற்காக இன்னும் பலர் தம் பதவிகளிலிருந்து விலகி வருவதே இதற்குக் காரணமாம்.

சட்டத்திலுள்ள இந்த ஷரத்தைப் பயன்படுத்தி இந்த வருடத்தில் மாத்திரம் 189 டாக்டர்களும், எஞ்சினியர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்களாம். லண்டனிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அநேகமாக எல்லா டாக்டர்களும் தாதிகளும் இலங்கையர்களாகவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

சர்வகலாசாலையில் பயிற்சிபெற்ற இந்த நிபுணர்கள் வெளிநாட்டுக்குச் சென்றுவிடுவதால் ஏற்படும் அவலநிலை குறித்து அரசாங்கம் மிகவும் கவலை கொண்டுள்ளது. (சி பி ஏ)

## கைத்தறிப் புள்ளிவிபரம் இன்று முதல் சேகரிப்பு

கொழும்பு, செவ்வாய் நாடு பூராவுமுள்ள நெசவாலைகளில் உள்ள கைத்தறிகளின் கணக்கெடுப்பு வேலைகள் இன்று ஆரம்பமாகிறது. கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தப் புள்ளிவிபரம் திரட்டப்படுகிறது.

நாடுபூராவும் 90,000 கைத்தறிகள் இருப்பதாக நெசவுச்சொந்தக்காரரிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களிலிருந்து தெரியவந்துள்ளதாயினும் இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை திட்டவட்டமாக அறிந்துகொள்ளும் நோக்கத்

(6 ம் பக்கம் பார்க்க)

### வடபகுதி அசைஸ் விசாரணை

## பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலைவழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய் வடபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலைவழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ எல் டி கிரெஸ்டர் முன்னிலையில் ஆரம்பமானது. சுமார் 2 மணி நேரம் ஜூரி சபையினர் இல்லாத நேரத்தில் விசாரணை நடைபெற்றது இன்றும் தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

இவ் வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதிக்கும் 68ம் ஆண்டு நவம்பர் 3ம் தேதிக்குமிடையில், முகமட் சுல்தான் முதலி என்பவரை கொலைசெய்ய, சபாரத்தினம் ராமச்சந்திரன், செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து ஒரே நோக்குடன் சூழ்ச்சி செய்ததாகவும் அந்த சூழ்ச்சியின் அவர் கொலைசெய்யப்பட்டதாகவும், 68ம் ஆண்டு நவம்பர் 2ம் திகதி ராமச்சந்திரன் என்பவர் முகமது சுல்தான் முதலியைக் கொலை செய்ததாகவும் அதேநேரம் அதே இடத்தில் நடராசா என்பவர் 1ம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் அட்வகேட் வி தம்பிரத்தினம் புறக்டர் ஆர் ஜே செல்வரத்தினம் புறக்டர் மயில்வாகனம் ஆகியோர் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம் எதிரிசார்பில் அட்வகேட் வி தம்பித்துரை புறக்டர் என் நடராசா புறக்டர் குணரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

## இன்றுபுராண படனம்

குருநகர், செவ் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் இன்று முதல் திருவிளையாடற்புராண படிப்பு நடைபெறும் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு இது ஆரம்பமாகும் தினமும் தொடர்ந்து 6 மாலைமணிக்கு இப்படிப்பு நடைபெறும்.

## உண்ணாவிரதம் இருந்த சர்வோதயத் தலைவர் கைது

சென்னை, ஆகஸ்ட் 30 தமிழ்நாட்டில் மதுவிலக்கு கடந்த நள்ளிரவு முதல் ரத்துசெய்யப்பட்டது

ராஜ்யம்முழுவதும் சுமார் 7,500 கள்ளுக்கடைகளிலும் 8000 சாராயத்தவறணைகளிலும் இன்று முதல் விற்பனை ஆரம்பிக்கப்பட்டது.

சர்வோதய இயக்கத் தலைவரும் மதுவிலக்கு ரத்து எதிர்ப்புக்குழு தலைவருமான திரு எஸ் ஆர் சுப்பிரமணியம் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தின் முன் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தார் அவரைப் பொலிசார் கைது செய்து காவலில் வைத்தனர்

சாராயக்கடை பொன்றின் முன் உண்ணாவிரதம் ஆரம்பித்த டாக்டர் ரமாதேவியையும் வேறு சிலரையும் பொலிசார் கைது செய் செய்தனர்.

## ஜீ.சி.ஈ. சித்தியடைந்த 100,000 பேரின் பத்திரங்கள்

கோட்டை திங்கள் கடந்த ஐந்து வருடங்களாகச் சித்தியடைந்துள்ள 100,000க்கும் மேற்பட்ட ஜீ சி ஈ [சாதாரணம்] மாணவர்கள் தங்கள் தராதரப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாதிருக்கின்றனர். இதைப் பரீட்சை ஆணையாளர் திரு: கே. மி. சுமணகுரிய விசாரணை மூலம் கண்டுபிடித்துள்ளார்.

1950ல் சித்தி எய்திய மாணவர் சிலர் பரீட்சை இலாகாவுக்குச் செய்த புகாரின் பேரிலேயே பரீட்சை அதிகாரி திரு. கே. மி. டபிள்யூ. சுமணசூரிய இதனைக் கண்டுபிடிக்க நேர்ந்தது.

## திருமண அழைப்பு

மணமகன்:

சுப்பிரமணியம் சோமசேகரம்

(ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

மணமகள்:

சுப்பிரமணியம் விஜலெச்சுமி

காலம் ஆவணி 16-ம் திகதி (1-9-71) புதன்கிழமை பி. ப. 6-20 க்கும் 7-03 க்கும் இடையில்

இடம்: நல்லூர் சிவன்கோவில்

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

தனித்தனிஅழைப்பிதழ் அனுப்பவியலாமைக்குமன்னிக்கவும்

N. சுப்பிரமணியமும் பாரியாரும்
'சதீஸ்வனம்'
80, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்:
2992

K. சுப்பிரமணியமும் பாரியாரும்
இளைப்பாறிய
P. W. D. ஓவசியர்
'விஜயா வாசம்'
சரணவாய் தெற்கு,
கரவெட்டி.

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

### விற்பனைக்கு

ராதா குரு தைலம்!
வாய்வுப் பிடிப்புகள், நரம்பு வலிகள், சுளுக்குகள், தலையிடி, ஜலதோஷம் முதலிய நோய்களுக்கு சிறந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் வீதி, கொழும்பு. 3523

### நன்றி நவிலல்

தம்பு சந்தனம்

18-7-71ல் காலமான தெகிவோவிற்றைத் தோட்டத் தொகுதி லொறி சாரதியும் அச்சுவேலி கணபதி பத்தர் கொம்பனி பரம்பரை உரிமையாளருமான தம்பு சந்தனத்தின் இறுதிச்சடங்கில் சமூகம் தந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் 18-8-71ல் அன்னாரது அந்தியேஷ்டியில் பங்கு பற்றியவர்களுக்கும் எமது நன்றி. சந்தனம் குடும்பம். ஆவரங்கால். 3534

### கல்வி

யாழ் நுண்கலை தொழிற் பாடசாலை 426 K. K. S. ரோட் யாழ்ப்பாணம் மோட்டார் இயந்திரவியல் "டிப்ளோமா (Diploma) ஒரு வருடம் மோட்டார்கார்கள், ஸ்கூட்டர், டீசல் எஞ்சின், வாகீடர் பம்களின் செய்முறையிலும் படிமுறையிலும் விசேஷ பயிற்சி அளிக்கப்படும். இங்களும் கற்பிக்கப்படும் தையல் வேலை "டிப்ளோமா" (Diploma) மெசின் ஒரு வருடம் சகல விபரங்களுக்கும் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது பத்து சத முத்திரையும் விலாசமுடைய தபாலுறையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பங்கள் 1-9-71க்கு முன் அனுப்பவும். கௌரவ தலைவர் சிவ. உ. சோமசேகரம், கௌரவ காரியதரிசி, இ. சபாலிங்கம் 3456

### தவறிவிட்டது

இன்று காலை யாழ்ப்பாணத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் லோக்கல் ஒன்றும், செட் ஒன்றும் தவறிவிட்டது தயவு செய்து அதைக் கண்டெடுத்தவர்கள் 91, மூஸ்லிம் கல்லூரி வீதியில் வசிக்கும் சலாம் என்பவருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3535

வெலிசினிமா
மானிப்பாய்
பி.ப. 2-30, 6-30, 10-00
ர. வி. எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

மாவட்ட கிரிக்கெட் போட்டியில்

# கொழும்புக் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், செவ் கொழும்பு தெற்குப் பாடசாலை தெரிவுக் கோஷ்டி வடமாகாண பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியை மிக இலகுவாக இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் மாவட்டப் பாடசாலை தெரிவுக் கோஷ்டிகளிடையே இப் போட்டியை நடாத்தி வருகின்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்புக் கோஷ்டி மொத்தம் 216 ஓட்டங்களை வேகமாகப் பெற்றது. இதில் சி. பெர்னாண்டோ 66 ஓட்டங்களையும், காப்டன் ஜி பத்மநாதன் 51 ஓட்டங்களையும், ஈ. தேவராஜன் 43 ஓட்டங்களையும் பெற்றனர். வீரர் சி. எஸ். மிக்ஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்

வடமாகாணக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸை ஆடஆரம்பித்த போது ஆரம்ப வீரர்கள் மிக அவதானமாக ஓட்டங்களைச் சேகரித்தனர். ஆரம்பத் துடுப்படி வீரர்களில் ஒருவரான வீரர் மிக்ஸ் ஆட்டமிழக்கும் போது வடமாகாணக் கோஷ்டி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்பின் இக் கோஷ்டியினர் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தவண்ணம் இருந்தனர். முதல் நாள் போட்டி முடிவடையும் போது வடமாகாணக் கோஷ்டி 7 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது நாள் போட்டி ஆரம்பமானதும் வடமாகாணக் கோஷ்டி தன்வசம் உள்ள மிகுதி மூன்று விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து இழந்து ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றது. இக்கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் கி. மகேந்திரன் 24 ஓட்டங்களை பெற்றார். வீரர் எஸ். விக்கிரமசிங்க 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

வடமாகாணக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 56 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஜி. குணசேன 4 விக்கெட்டுகளையும் ஆர். அபஜநாயக்கா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

கொழும்புக் கோஷ்டி இப் போட்டியில், வடமாகாணக் கோஷ்டியை இன்னிங்ஸாலும், 61 அதிகப்படியான ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திருவாளர்கள் பூபாலும், மகேந்திரனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

(தே நி)

### ஏல விற்பனை

நிலைத்திக்கலை வட்டார பத்தை வீதியில் 10-ம் நம்பர் இலக்கக் கடையில் நகை அடைவு பிடிக்கும் கா. கனகரத்தினம் அவர்களிடம் 4-8-69 முதல் 31-8-70 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவையும் 1971 செப்ரம்பர் 19-ந் திகதி காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த எத்தில் என்னும் விற்கப்படும்.

N. M. A. C Abdul Hameed
Auctioneer
110, Centre.
Colombo-15 3000

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p m.
Sat, Sundays 10-30 A.M.
Tony Russel
in
THE THIEF OF SAMARKAN
(Color)
தினசரி பி. ப. 2-00, 9 45
திலீப்குமார்-வைஜந்திமாலா
நடித்த
பாட்டாளியின் சபதம்

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
மட்டும்
ONE SPY TOO MANY
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஹரிதாஸ்

MANOHARA
(Jaffna)
Daily
4-45 7-00 & 9-45 p.m.
THE WARRIOR AND THE SLAVE GIRL
(Eastman color)
2-ந் திகதி முதல்
பம்பாயில்
சி. ஐ. டி. 555

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-00, 10-00 மணி.
எம். ஜி ஆர் வைஜந்தி
நடித்த
பாக்தாத் திருடன்

### விளையாட்டுப் போட்டி

அம்பன், திங்கள்
சுப்பர்மடம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும் முதலாவது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் அடுத்த மாதம் 9ந் திகதி சுப்பர்மடம் விளையாட்டுத் திடலில் வைத்திய கலாநிதி க. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கிறது பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து கலந்து கொள்வார். இவ்விழாவில் சைக்கிள் ஓட்டப் போட்டி, நீச்சல் போட்டி, கயிறிழுத்தல் கட்டுமரம் வலித்தல், இயந்திரக் கட்டுமர ஓட்டம், பாரம் தூக்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## திருமண அழைப்பு

| | |
|---|---|
| நடராசா நமசிவாயம் (மனேஜர் சென்றல் தியேட்டர்) | நாகலிங்கமுதலி இராஜராஜேஸ்வரி |

1971 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1-ந் திகதி (ஆவணி மீ 16 ந் திகதி) புதன்கிழமை இரவு 7-15 மணி முதல் 8-46 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பருத்தித்துறை நீதிஸ்தல வீதியிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமணவிழா நடைபெறும்.

2-9-71 வியாழக்கிழமை பி. ப. 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் (விநாயக முதலியார் வீதி) வரவேற்புபசார விழா நிகழும்.

உறவினர்களும் நண்பர்களும் இவ்வழைப்பை அன்புடன் ஏற்று மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| ந. நடராசாவும் (வழக்கறிஞர்) பாரியாரும் விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. | சி. நாகலிங்கமுதலியும் J. P (வழக்கறிஞர், நொத்தாரிஸ்) பாரியாரும் நீதிஸ்தலவீதி, பருத்தித்துறை. 3001 |

ராணி (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன் - காஞ்சனா
நாகேஷ் - மனோகர் நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
# நாலும் தெரிந்தவன்

வெலிங்டன் (யாழ் நகர்) லிடோ (யாழ். நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி. (காலை 10-00 மணி மட்டும்)
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா
திரைகளில்



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
# தெய்வமகன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30 மணி
ஜோய் அபேவிக்ரம
★ க்ளோரிஸ் டி சில்வா
★ சந்தியா குமாரி
நடித்த
# அல்லப்புகெதற
(சிங்களம்)

வின்சர் யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா ★ நிர்மலா
நடித்த
# சங்கமம்

# ஐரிஷ் குடியரசுக்குள் தவறுதலாக நுழைந்த பிரிட்டிஷ் போர்வீரர்மீது துப்பாக்கிச் சூடு

## ஒருவர்கொலை; மற்றவருக்குகாயம்

### பெல்பாஸ்டில் தொடர்ந்து கலவரம்

லண்டன், ஆக 30

**வடஅயர்லாந்துக்கும் ஐரிஷ் குடியரசுக்கு மிடையிலான எல்லையில் நேற்று இடம் பெற்ற ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் பதட்டமும் நெருக்கடியும் உருவாகியுள்ளது.**

இந்தச் சம்பவத்தைப்பற்றிய முழுவிபரமும் அடங்கிய அறிக்கைகளைத் தருமாறு இரு நாடுகளும் ஒன்றை ஒன்று கோரியுள்ளன.

வடஅயர்லாந்தில் இருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளைச் சேர்ந்த ஒரு ரோந்து கோஷ்டி தவறுதலாக ஐரிஷ் குடியரசுக்குள் நுழைந்ததால் இந்தச் சம்பவம் ஏற்பட்டது. இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த இரண்டு வாகனங்கள் ஐரிஷ் குடியரசுப் பகுதிக்குள் நுழைந்து விட்டன. இந்தப் பகுதியில் எல்லையைக் குறிக்கும் வகையில் இன்னமும் தெளிவான ஏற்பாடு செய்யப்படாததே இதற்குக் காரணமாம். ஐரிஷ் குடியரசுக்குள் நுழைந்த இரண்டு பிரிட்டிஷ் ராணுவ வாகனங்களையும் ஐரிஷ் குடியரசைச் சேர்ந்தவர்கள் கார்களையும் இதர வாகனங்களையும் குறுக்கே நிறுத்தித் தடை ஏற்படுத்தினர்கள். ஒரு வாகனத்தை நெருப்பு வைத்துக் கொளுத்தினர்கள். உடனே மற்ற வாகனத்தில் ஏறிக் கொண்டு சிப்பாய்கள் வடஅயர்லாந்துக்குள் திரும்பும் போது காரின் ஒரு டயர் பழுதடைந்ததால் அதனைத் திருத்துவதற்காக நிறுத்தினர்கள். அப்பொழுது ஐரிஷ் குடியரசுப் பகுதியிலிருந்து துப்பாக்கிகள் தீர்க்கப்பட்டன. இதனால் பிரிட்டிஷ் சிப்பாய்களில் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னுமொருவர் காயமடைந்தார். பிரிட்டிஷ் துருப்பினர் திருப்பிச் சுட்டார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து இருசாரரிலும் உணர்ச்சிகள் கொந்தளிப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம்பற்றிய விளக்கத்தைக் கோரும்படி டப்ளினிலுள்ள தனது தூதுவரை பிரிட்டிஷ் அரசாங்கம் கோரியிருக்கின்றது. இதேமாதிரி போர் விளக்கத்தை ஐரிஷ் குடியரசும் கோரியிருக்கின்றது.

இதேவேளையில் வடஅயர்லாந்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. பல இடங்களிலும் நேற்று குண்டுகள் வெடித்தன. பெல்பாஸ்டில் குண்டு ஒன்று வெடித்ததில் பிரிட்டிஷ் போர்வீரர் ஒருவர் காயமடைந்தார்.

இந்த ஆண்டில் இதுவரையில் வடஅயர்லாந்தில் கத்தோலிக்காகளுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையிலான போராட்டங்களின் காரணமாக 15 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

## 'அமைதி நிலவட்டும்,' பாப்பரசர் கோரிக்கை

வடஅயர்லாந்தில் அமைதி ஏற்பட வேண்டுமென பாப்பரசர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வத்திக்கானிலிருந்து பாப்பரசர் விடுத்த ஒரு வேண்டுகோளில் வடஅயர்லாந்தில் இரு சமூகத்தவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்னை அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்துகளும் ஒரே கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் எனவே ஒருமைப்பாட்டை சமயத்தின் மூலமே ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடஅயர்லாந்தில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே அங்கு நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது என்றும் பாப்பாண்டவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## கப்பல் தீப்பிடித்ததில் 31 பேர் பலி?

பிரிண்டிஸி, ஆக 30

கிரேக்க கப்பலான ஹெலியானுவில் தீ பற்றியதின் காரணமாக 31 பேரைக் காணவில்லை. இவர்களில் 25 பேரின் சடலங்கள் கிடைத்துள்ளன.

11674 தொன் நிறையுள்ள இந்தக் கப்பல் இத்தாலியின் அட்ரியாட்டிக் கடலோரக் கரையில் தீப்பற்றிக்கொண்டது. கப்பலில் சுமார் 1,100 பேர் இருந்தனர். இவர்களில் 1096 பேர் வரை கரை சேர்ந்துள்ளதாக ஒரு செய்தி கூறியது. 266 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அரபுச் சம்மேளன அரசியல் சாஸனம்

### எகிப்து அங்கீகாரம்

கெய்ரோ, ஆக 30

ஐக்கிய அரபுச் சம்மேளனத்தின் அரசியல் சாசனத்தை ஐக்கிய அரபுக் குடியரசின் தேசியசபையும் அந்த நாட்டின் ஒரே ஒரு அரசியற் கட்சியான அரபு சோஷலிஸக் கட்சியும் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஐக்கிய அரபு சம்மேளனத்தில் ஐக்கிய அரபுக்குடியரசு, லிபியா, சிரியா ஆகிய நாடுகள் சேர்ந்துள்ளன. சூடானும் இதில் நான்காவது 'உறுப்பு' நாடாகச் சேர்ந்துகொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள அரசியல்சாசனம் ஏனைய நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அந்தந்த நாடுகளின் மக்கள் அபிப்பிராயக் கணிப்புக்கும் விடப்படும். மக்கள் அபிப்பிராயக்கணிப்பு அக்டோபரில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## புயலுக்கு 11 பேர் பலி

டோக்கியோ, ஆக 30

ஜப்பானில் வீசிய கடும் புயலொன்றில் சுமார் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர். துறைமுகங்களில் நின்ற கப்பல்கள் பல தரைதட்டியுள்ளன.

பட்டாசுக்கடை

## தீ விபத்தில் 8 பெண்கள் பலி

சென்னை, ஆக. 30

தமிழ்நாட்டில் சிவகாசியில் பட்டாசுக்கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 பெண்கள் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்

## தென்வியட்னும் தேர்தல்: 78 வீதம் வாக்களிப்பு

சைகோன், ஆகஸ்ட் 30

தென்வியட்னும் ஆட்சி மன்றத்தின்கீழ் சட்டசபைக்கான தேர்தலில் நேற்று 78 சதவீதம் மக்கள் வாக்களித்திருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

இது சமீபாய் இருந்தால் அதிபர் வான்தியுவின் கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கு பலத்த ஆதரவு கிடைத்திருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

தேர்தலின்போது கம்யூனிஸ்ட்கள் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும் என்று முதலில் அஞ்சப்பட்டது. இதனால் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் பெரிய அளவில் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஒரு வாக்குச்சாவடியில் மாத்திரம் குண்டு ஒன்று வெடித்ததில் 7 பேர் கொல்லப்பட்டனர். அடுத்த அக்டோபர் மாதத்தில் அதிபர் தேர்வு நடைபெற இருக்கின்றது. நேற்றைய சட்டசபைத் தேர்தல் பற்றிய முடிவுகள் இனிமேல்தான் வெளிவரும்.

## பொட்கர்னி வட வியட்னும் செல்வார்

மாஸ்கோ, ஆகஸ்ட் 30

சோவியத் அதிபர் நிக்கொலாய் பொட்கர்னி வருகிற அக்டோபர் மாதத்தில் வடவியட்னுமுக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதற்காகவே அவர் அங்கு செல்லவிருக்கிருர்.

## தமிழில் தமிழக வரலாறு

சென்னை, ஆகஸ்ட் 30

மூவேந்தர் ஆட்சிக்குப் பின்னர் உள்ள தமிழக வரலாறு புதிதாக எழுதப்படவுள்ளது. தமிழக அரசினுல் இதற்கென நியமிக்கப்பட்ட குழுவிற்கு மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் கலாநிதி மு. வரதராசன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழில் எழுதப்படும் இவ்வரலாறு பின்பு ஆங்கிலத்திலும் வெளியிடப்படவுள்ளது. இதற்கான ஆரம்பவேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## பரிசு பெற்றனர்

தாவடி, திங்கள்

கொக்குவில் கிழக்கு திருவள்ளுவர் இளம் விவசாயிகள் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட விவசாய அறிவுப் போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றனர்: 1-வது செல்வன் சி ராகுலன் 2-வது செல்வன் கு. சற்குணநாதன் 3-வது செல்வன் ப சச்சிதானந்தன்.

## பயிற்சி வகுப்பு

அம்பன், திங்கள்

பனம் பழத்திலிருந்தும், பனைப்பழத்திலிருந்தும் ஜாம் உற்பத்திசெய்யும் முறையும் பனை ஓலையிலிருந்து தாக்குப் பை உற்பத்திசெய்யும் வகையையும் ஊக்குவிக்குமுகமாக குடத்தனை கிராமசபை அபிவிருத்திச் சபைச் செயலாளர் செல்வி வி. சின்னத்துரை தலைமையில் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தற்போது அம்பன் மாதர் முன்னேற்றச் சங்கத்தினருக்குப் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகிறது.

## துணிச்சல்மிக்க பாக். முயற்சிக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளதாம்

### பாரத - சோவியத் ஒப்பந்தம்பற்றி பிரதமர் இந்திரா

புதுடில்லி, ஆக. 30

இந்தியாவுக்கெதிராக இஸ்லாமாபாத் அரசாங்கம் துணிச்சல் மிக்க முயற்சி எதிலும் இறங்குவதற்கு ஆப்புவைப்பதாக சோவியத்-இந்திய நட்புறவு உடன்படிக்கை அமைந்துள்ளது என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத் அரசு மக்களிடமிருந்து பிரிந்துவிட்டது. தனது சொந்த மக்களுக்கு எதிராகவே போர் தொடுத்துள்ள பாகிஸ்தான் அரசு மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக இந்தியாவுக்கெதிராகப் போர் முழக்கம் செய்கின்றது இதைப் பார்த்தும் பாராமுகமாக நாம் இருந்துவிடமுடியாது' என்று திருமதி காந்தி கூறினர்.

உலக சமாதானக் கவுன்சிலின் பொதுச் செயலாளர் திரு. ரமேஷ் சந்திரா கேட்டகேள்விகளுக்கு விடை பணிக்கையில் பாரதப் பிரதமர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உலக நாடுகளின் போக்கில் இப்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. சோவியத் நாடு நமது நட்பு நாடு என்பதை நாம் நன்கு அறிந்துகொண்டுவிட்டோம். இதன் காரணமாகவேசோவியத்-பாரதஉடன்பாட்டுக்கு மக்கள் இவ்வளவு ஆதரவளித்துள்ளனர். இந்த ஒப்பந்தம் அணிசாராப்பற்ற கொள்கையிலிருந்து விலகிவிடவில்லை. சுதந்திர நாடுகள் போர் பயமுறுத்தல்களிலிருந்து பாதுகாப்புத்தேடிக் கொள்ளாமலிருக்கமுடியாது

## 191 பேரைக் கொன்றனர்

கடந்த வாரம் கிழக்குப் பாகிஸ்தான் விடுதலை வீரர்கள் சுமார் 191 பாகிஸ்தான் சிப்பாய்களைக் கொன்றுவிட்டார்களாம். சில்கட், மைமன்சிங் ராஜ்பூர் ஆகிய இடங்களில் விடுதலைப்படையினர் கொமாண்டோத் தாக்குதல்களை நடத்திப் பாகிஸ்தான் சிப்பாய்களைக் கொன்றதுமட்டுமின்றி ஏராளமானவர்களைச் சிறைப்பிடித்துமிருக்கிறார்களாம். ஏராளமான ஆயுதங்கள் தோட்டாக்கள் போன்றவற்றைக் கைப்பற்றியிருக்கிறார்கள்

## 'யாழ். பிரதேசக் கலைமன்றத்திற்கு புத்துயிரளிக்கவும்'

யாழ்ப்பாணம், செவ். 'கடந்த சில ஆண்டுகளாக வடபகுதிப் பிரதேசக் கலாமன்றம் செயற்படாமல் இருக்கின்றது. அதற்குப் புத்துயிரூட்டி மீண்டும் ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுத்தவேண்டும்' என்று யாழ் அரசாங்க அதிபரைக் கோரும் தீர்மானம் யாழ் இலக்கியவட்டத்தின் 5-வது ஆண்டுவிழாவில் நிறைவேற்றப்பட்டது.

யாழ் மாநகரசபை வைரவிழா மண்டபத்தில் கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை தலைமையில் விழா நடைபெற்றது.

இவ்விழாவின்போது நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

இலங்கையின் கலை கலாச்சார வளர்ச்சிக்கு அரசுசார்பிலும் ஆர்வத்திற்கும் வடபகுதியில் உயர்கலை நிலையம் அமைப்பதற்கு முயற்சிப்பதற்கும் யாழ் இலக்கியவட்டம் ஆதரவு தெரிவிக்கும் அதே சமயம் பல ஆண்டுகளாக இம்முயற்சி பேச்சளவிலேயே இருந்து வருவதைச் சுட்டிக்காட்டி விரைவில் அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கோருகிறது.

இலங்கையில் தமிழ் நாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதுடன் தகுதியான ஆலோசனைக்குழுவொன்றை நியமித்து தரமான படங்களையே இறக்குமதிசெய்யும் வாய்ப்பை உண்டாக்கவேண்டும்.

எதிர்வரும் 11ம் திகதி பாரதிவிழாவைக் கொண்டாடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

6-வது ஆண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: இரசிகமணி கனக செந்திநாதன், தலைவர்: மதுரகவி இ. நாகராஜன், செயலாளர்: கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, உபதலைவர்கள்: இணைச்செயலாளர்கள்: தி. ச. வரதராஜன், சு. இராஜநாயகன், தனாதிகாரி: கவிஞர் வி. கந்தவனம், பிரசாரச் செயலாளர்: ஏ. ரி. பொன்னுத்துரை, செயற்குழு உறுப்பினர்கள்: 'யாழ்வாணன்', 'செம்பியன்செல்வன்', கல்வயல் கவிஞர் வே குமாரசாமி, கவிஞர் அரியாலையூர் வே ஐயாத்துரை, கே வி நடராஜன்

······

## இவர்களும் சேர்க்கப்படுவர்

குருநகர், திங்கள்

அண்மையில் தொழிற்சந்தோர் மூலம் தெரிவுசெய்து உணவுக்கட்டுப்பாட்டினாகாவிற்குத் தற்காலிக நியமனம் கொடுக்கவிருக்கும் 48 நியமனங்களிலும் 12 இடங்களுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியவர்களை நியமிக்கவேண்டுமென அரசாங்கப்பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளைச் செயலாளர் எஸ் ஆறுமுகம் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி பி செல்வரத்தினத்துடனும் மேலதிக அரசாங்க அதிபர் ஏ யோசப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் மேற்படி 12 ஊழியரையும் எடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது

—

## கட்டிடக் கலைஞருக்கு ஒரு போட்டி

கோட்டை, திங்கள்

வீடமைப்பு அமைச்சு இலங்கைக் கட்டிடக்கலைஞரிடையே ஒரு போட்டியை நடாத்தவுள்ளது.

1000, 500, 250 சதுர அடி நிலங்களில் மாதிரி வீடுகளை அமைத்துக்காட்டும் சிறந்த மூன்று கட்டிடக்கலைஞருக்கு வீடமைப்பு அமைச்சு பரிசுகள் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான கமிட்டி ஒன்றையும் கட்டிடஇலாகா தேர்ந்தெடுத்துள்ளது. இக்கமிட்டி போட்டிக்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது. வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் ரஷ்யாவிலிருந்து திரும்பியதும் இப்போட்டி நடைபெறும்.

— —

## புனருத்தாரண சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்மாதம் 24-ம் திகதி புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீமுத்துநயினார் புலம் விநாயகர் ஆலய புனருத்தாரண சபையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ ஐ கைலாயநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் கா மதியாபரணம், ஆ. கு மாணிக்கவாசகர், க. மயில்வாகனம், ச நடராசா, க வேலுப்பிரமணியம், ஆ. வி தம்பித்துரை, தலைவர்- திரு பி வே சுப்பிரமணியம், உபதலைவர்கள்- திருவாளர்கள் சி சுப்பிரமணியம், கா. ஆறுமுகம், காரியதரிசி திரு. செ செந்திநாதன், உபகாரியதரிசி- திரு ச கனகரத்தினம். தனாதிகாரிகள்- திருவாளர்கள் க நாகேசு, கா குமாரசாமி. 8 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## மேலதிக ஊழியரை நியமிக்குக

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் அரசினர் மருத்துச்சாலையில் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தினசரி சிகிச்சை பெறவருவதால் இங்கு கடமையாற்றும் ஒரே ஒரு மருந்துக் கலவையாளரே மருந்து கொடுப்பதும் மருந்து கட்டுவதுபோன்ற பல்வேறு வேலைகளையும் செய்ய வேண்டியிருப்பதால் இங்கு வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்து மருந்து பெறவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மருந்துச்சாலைக்கு மேலதிக ஊழியர் ஒருவரை நியமிக்குமாறு இப்பகுதி மக்கள் சுகாதார இலாகாவினரை வேண்டியுள்ளனர்

—

## 'தண்ணீர்க் கஷ்டத்தை நீக்கவும்'

குருநகர், திங்கள்

சரவணை சின்னமடு றோ க. பாடசாலையில் நல்லதண்ணீர் கிணறு ஒன்றை வெட்டி இப்பாடசாலை மாணவர்களின் குடிநீர்க் கஷ்டத்தை நீக்குமாறு கல்வி அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்றை நாரந்தனை கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

## பாடசாலைகளில் பேக்கறி

கோட்டை, திங்கள்

நாடுமுழுவதும் 200 பாண் பேக்கறிகள் நிறுவ அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதில் பெரும்பான்மையானவை பாடசாலைகளில் அமையும். ஏற்கனவே கம்பளை, தெகிவளை ஆகிய இடங்களில் உள்ள இரண்டு மகாவித்தியாலயங்களில் பாண் பேக்கறிகள் அமைக்கப்பட்டுவிட்டதாகவும் இந்தப்பாண் பேக்கறிகள் அடுத்தமாதம் முதல் செயல்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு கிரமமாக மதியபோசனம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

······

## புது வகை நல்லின நெல்

அம்பன், திங்கள்

வடபகுதியில் உள்ள சதுப்பு நிலங்களிலும் வரட்சி கூடிய இடங்களிலும் விளையக்கூடிய நான்கு நல்லின நெல் வர்க்கத்தை வடபகுதி விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி இங்கு வரவழைத்துள்ளார்.

பிலுபூலொங், டிக் வீ. பீ ஜீ 11 எம், ஐ 273 என்ற நான்கு இன நெல்லும் 2 முத்தல் கொண்ட சிறு பொதிகளாக அடைக்கப்பட்டு அதற்கு வேண்டிய அடிக்கட்டுப் பசளை, மேற்கட்டுப் பசளை ஆகியன 3 பொதிகளாக அடைக்கப்பட்டு விற்கப்படுகிறது. 2 முத்தல் கொண்ட நெல்லை வாங்கும்பொழுது 3 பொதி உரமும் சேர்த்து வழங்கப்படும். வடமராட்சிப்பகுதியில் இந்த நல்லின நெல் வர்க்கம் பெருந் தொகையாக விற்பனையாகின்றது.

······

நல்லை

## இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், செவ்வாய்

பிற்பகல் 5-30 மணி அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள் — வயலின், பாட்டு மாலை 6-15 மணி செல்வி செல்வம் நாராயணசாமி — பாட்டு.

இரவு 7-30 மணி திரு. வி. நடேசன் — பாட்டு. 9-00 மணி திரு. எஸ். கணபதிப்பிள்ளை — பாட்டு, திரு. எஸ். சோமஸ்கந்தசர்மா—வயலினும், செல்வி ஜெயமணிதேவி ஐயாத்துரை, திரு. ஏ எஸ் இராமநாதன், செல்வன் கா ஜெயன் செல்வக்குமார் ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பர்.

—

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் கொழும்புக் கிளைப் புனரமைப்புக் கூட்டம் கழகச் செயலாளர் திரு க திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றபோது காப்பாளராக திரு நா த மயில்வாகனமும் தலைவராக திரு க தம்பிராசாவும் செயலாளராக ச செந்தில் முருகனும் பொருளாளராக க துரைசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

—

## ஜே. பி. ஆக நியமனம்

ஊரதீவு, திங்கள்

நாரந்தனை கிராமசபையின் உபதலைவரும், நாரந்தனை கிராமசபைப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைத் தலைவருமான திரு. ரீ. திருஞானசம்பந்தன் நீதியமைச்சினால் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தொழில்நுட்ப ஆசிரியபயிற்சிக் கலாசாலை

கோட்டை, திங்கள்

நாட்டின் முதலாவது தற்காலிக தொழில் நுட்ப ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அடுத்த மாதம் 2ந் திகதி இரத்மலானையில் கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் பி உடகமவினால் திறந்துவைக்கப் படவிருக்கிறது.

இந்நிறுவனம் பின்னர் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்படும். இதற்கான கட்டிடம் தற்போது கட்டுப்பெத்தையில் 75 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் இலங்கையில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற சுமார் 25 தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு தற்போது இலங்கையிலுள்ள வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் பயிற்சியளிப்பர். இக்கல்லூரிக்குரிய உபகரணங்களை ஐ நா அபிவிருத்தித்திட்டமும் உலக தொழில் நிறுவனமும் வழங்கும்.

—

## இடமாற்றம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவுக் கிராமசபையின் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியாக டாக்டர் ஈ கே குணரத்தினசிங்கம் முள்ளியவளை கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலையில் இருந்து இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். திரு குணரத்தினசிங்கம் முன்பும் புங்குடுதீவு கிராமசபையின் பத்தொன்பது வருடங்களாகக் கடமையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவு தபால்நிலைய அலுவலாளராக திரு கே பதமநாதன் சுண்டிக்குளி தபால் நிலையத்திலிருந்து இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

அம்பன், திங்கள்

இணுவில் அரசினர் மருத்துவத்தில் மலேரியாத் தடுப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். சண்முகராசா கண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

சாய்ந்தமருது, திங்கள்

பிரபல எழுத்தாளரும், சாகித்தியமண்டலப் பரிசு பெற்றவருமான ஜனாப் ஏயாரூம் ஸலீம் பொத்துவில் மகா வித்தியாலயத்திலிருந்து முதலாம்தரத் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று கண்டி மாநிலத்தைச் சேர்ந்த உடிஸ்பத்துவ முஸ்லிம் வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

பட்டிருப்புத் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு ரீ புவனசிங்கம் முதல்தர ஆசிரியராகப் பதவிஉயர்வு பெற்று அட்டன் டங்கெல்ட் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

······

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஏழாலை தெற்கு அமெரிக்கன்மிஷன் கனிஷ்டவித்தியாலயத்தில் பதில்தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. ஐயாத்துரை நவரத்தினம் 1-8-71 தொடக்கம் இரத்தினபுரிப்பகுதி காஹவத்த அரசினர் சிரேஷ்ட வித்தியாலயத்திற்கு முதலாந்தர தலைமையாசிரியராக நியமனம் பெற்று அங்கு கடமை பெற்றுள்ளார்.

## 'வீதியைத் திருத்துக'

அம்பன், திங்கள்

குடாரப்புக் கடற்கரை வீதி மக்கள் நடமாடமுடியாதநிலையில் சீர்கேடடைந்திருப்பதாகவும் கடந்த நாலு மாதத்துக்கு மேலாகியும் வீதி திருத்தப்படவில்லையாதலால் வீதியை உடன் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அம்பன் இ ச 11ம் வட்டார அங்கத்தவர் எம் எஸ் பசுபதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

—

## "மகாவித்தியாலயம் ஆக்க முயற்சிப்பேன்"

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் வருடாந்தவிளையாட்டுப்போட்டியில் பசுபதி இல்லம் முதலிடம்பெற்றது. துரைச்சாமி இல்லம் இரண்டாமிடத்தையும், நமசிவாயம் இல்லம் மூன்றுமிடத்தையும் பெற்றன.

புங்குடுதீவுக் கிராமசபைத் தலைவர் திரு. மதியாபரணம் ஜே பி, வித்தியாசாலைக் கொடியை ஏற்றிவைக்க இப்போட்டி புங்குடுதீவு-குறிச்சிக்காடு விளையாட்டுத்திடலில் ஆரம்பமானது. தீவுப்பகுதி வட்டாரக் கல்வியதிகாரி திரு ஏ எஸ் நமலைனா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வெற்றி பெற்றோருக்கான பரிசுகளை யாழ்ப்பாண மாவட்டக் கல்வியதிகாரி திரு. அ. சந்திரசேகரம்பிள்ளை வழங்கினார். அடுத்த ஆண்டு முதல் இப்பாடசாலையை மகாவித்தியாலயமாக்குவதற்குரிய நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்வதாகக் கல்வியதிகாரி தெரிவித்தார்.

—

## காரைநகர் தெற்கு இ ச கோரிக்கை

ஊரதீவு, திங்கள்

தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவிலிருந்து காரைநகரைப் பிரிக்க வேண்டாமெனக் காரைநகர் தெற்குக் கிராமசபை, பொதுநிர்வாக, உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைக் கேட்டிருக்கிறது.

## அனுதாபத் தீர்மானம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவுக் கிராமத்தின் முன்னாள் உடையாரும், திடீர் மரணவிசாரணை அதிகாரியும், சமாதான நீதவானுமாகிய திரு மா முருகேசுவின் திடீர் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்று புங்குடுதீவு மக்கள் சேவாசங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

—

## சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை, செவ்

இன்று வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவிலில் சங்காபிஷேகம் நடைபெறுகிறது. நண்பகல் மகேஸ்வர பூஜையும், இரவு இசை நிகழ்ச்சியும் சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும்.

······

## பண்ணிசை வகுப்பு

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் தெற்கு இந்து சமயவிருத்திச் சங்கத்தினரால் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்டிதர் ம. இராசகுருவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் வகுப்பு வார விடுமுறை நாட்களில் இலவசமாக நடைபெறும். பண்ணிசைச் செல்வன் க. சிவபாலன் வகுப்புகளை நடத்துவார்.

## மணிவாக்கு

உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது! சேவைதான் வெளிப்படுத்தும்.

— சாந்தியடிகள்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna | Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 15-ந் திகதி (31-8-71)

## வைத்திய நிபுணரின் "கை வைத்தியம்"

நடுப்பகல். போக்குவரத்து நெருக்கடியான சமயம். தலைநகராம் கொழும்பின் பெரிய புள்ளிகள் வசிப்பதாகக் கூறப்படும் கறுவாக்காட்டுப் பகுதி. வார்ட்பிளேஸ் என்ற வீதியின் நடுவே ஒரு வாடகைக் கார் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் காரின் சாரதி இன்னொருவரின் உதவியுடன் சேலை கட்டிய ஒரு பெண்ணைக் காருக்குள் இழுத்துக்கொண்டு நிற்கிறார். திரண்டுநின்ற கூட்டம் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறது. இச்சமயம் வைத்தியநிலையம் ஒன்றிலிருந்து வெளியே வந்த சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் அந்த இடத்துக்கு வந்து பெண்ணை இழுத்த இருவருக்கும் இரண்டு அறை கொடுக்கிறார்; பெண் ஓடித் தப்பி விடுகிறாள். அன்று மாலை சுமார் இருபத்தைந்து வாடகைக் கார்கள் அந்த வைத்திய நிலையத்தில் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன. காரிலிருந்தவர்கள் அந்த சத்திர சிகிச்சை நிபுணரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்கின்றனர். கடுமையான வார்த்தைகளால் ஏசவிடுகின்றனர்! அவர் அங்கு இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது. "நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று கூறியபடி அவர்கள் செல்கின்றனர். இச்சம்பவம் பற்றி அந்த வைத்திய நிபுணர் பின்னர் கறுவாக்காட்டுப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்கிறார்.

இப்படியொரு செய்தி இரண்டு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி ஒன்றின் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்தது. இச்சம்பவம் சம்பந்தமாகப் பொலிசார் என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்பது தெரியவில்லை. அவர்கள் புலன் விசாரணை செய்துவரக் கூடும்.

அந்தப் பெண்ணுக்கும் இழுத்துச்செல்ல முயன்றவர்களுக்கும் ஏதாவது தொடர்பிருக்கக் கூடும். குடும்பப் பிரச்சினையாகவும் இருக்கலாம்! ஆனால் தலைநகரில் மக்கள் நடமாட்டமுள்ள ஓர் இடத்தில் நடுப்பகலில் ஒரு பெண்ணை இருவர் பலாத்காரமாக இழுத்துக் காரில் ஏற்றிச்செல்ல எத்தனித்தபோது அதைப் பார்த்துக்கொண்டிராமல் "கை வைத்தியம்" செய்த அந்த வைத்தியநிபுணரின் துணிச்சலையும் ஆபத்தான நேரத்தில் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பளிக்க முனைந்த அவரின் நல்ல மனப்பான்மையையும் பாராட்டவேண்டும்.

பிறரின் துன்பத்தை வேடிக்கை பார்த்து ரசிக்கும் பழக்கம் நமது நாட்டில் மலிந்துவருவதையும் இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. என்றாலும் இதற்காக அவர்கள்மீது மட்டும் குறை குற்றம் முழுவதையும் சுமத்திவிட முடியாது.

இதுபோன்ற ஆபத்தான சமயங்களில் உதவிக்குச் செல்பவர்கள் ஆபத்தைத் தாமாகவே தேடிக்கொள்ளவும் நேரிடுகின்றது. பொலிஸ் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணைகளிலும் ஏற்படும் தாமதங்கள், அதனால் உதவிக்குச் சென்றவர் அனுபவிக்க நேரிடுகின்ற அநாவசிய அல்லல் தொல்லைகள் — இவை போன்ற காரணங்களினால் தான் வீதிகளில் நடந்தாலென்ன அடுத்த வீடுகளில் நடந்தாலென்ன, "நமக்கேன் வீண் வம்பு!" என்று தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

இந்த மனப்பான்மை நல்லதல்லத்தான். பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லுறவும் நல்லுணர்வும் ஒத்துழைப்பும் வளர்ந்தால் வீதிகளில் இதுபோன்ற பலாத்காரச் சம்பவங்கள் மட்டுமல்ல, நாட்டிலேயே குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைந்துவிடும்.

இதற்கு முதற்படியாக பொலிசில் புகார்செய்ய தற்போது பொதுமக்கள் அஞ்சும், தயங்கும் நிலை நீங்கவேண்டும். பொலிஸ் விசாரணைகளும் சரி நீதிமன்ற விசாரணைகளும் சரி கால தாமதம் இல்லாது விரைவாக முடிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதே சமயம் வீதிகளில் மக்கள் பாதுகாப்பாக நடமாடுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது அவசியம்.

## கொக்குவில் கி. ச. அனுதாபம்

யாழ்ப்பாணம், செவ்வாய் — டாக்டர் இ. மு. வி. நாகநாதனின் மறைவு குறித்து கொக்குவில் கிராமசபை ஓர் அனுதாபத் தீர்மானத்தை நேற்று நிறைவேற்றியது. சபைத் தலைவர் திரு. சி. க. சபாபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. செ. பத்மநாதன் பிரேரித்து திரு. செ. கனகசபாபதி அனுமதித்து ஏகமனதாக நிறைவேறிய அனுதாபத் தீர்மானத்தில் "அரும் சேவைகளைப் பெற்ற இப்பகுதியில் அமைந்துள்ள எமது சபையும் அதன் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தாருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தெரிவித்துக் கொள்கிறது" என்று கூறப்பட்டுள்ளது.

சுகாதாரசேவைத் தொழிலாளர் சங்கம்

## கனிஷ்ட ஊழியருடன் சேர்ந்து சம்மேளனம் அமைக்கமுடிவு

குருநகர், திங்கள் — சிறு சேவையாளர்களுக்கு எட்டுமணிநேர வேலை அமுல் நடத்தப்படாத இடங்களில் அதனை அமுல் நடத்தவேண்டும் என்றும் இருபத்திநாலு மணித்தியாலமும் மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவ மாதர்களின் கஷ்டத்தைத் தீர்க்கும்வகையில் மேலதிக மருத்துவ மாதர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், தமிழ்ப்பகுதிகளிலுள்ள கனிஷ்ட ஊழியர் சங்கங்களுடன் கூட்டாக இணைந்து தொழிற்சங்க சம்மேளனமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் யாழ் நகர மண்டபத்தில் நடைபெற்ற தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

சங்கத் தலைவர் திரு. பொ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் 23 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேசிய ரீதியில் அகில இலங்கை சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத்துடன் மீண்டும் இணைந்து பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இக்கூட்டத்தில் தோல்வியடைந்தது.

அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்க யாழ் கிளைத் தலைவர் திரு. ஏ. யோசேப், அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. எஸ். செல்வத்துரை ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தொழிலாளர் பிரச்சினைகள் பற்றியும் தொழிற்சங்கங்களின் கடமைகள் பற்றியும் உரையாற்றினர்.

புதியவுட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: பொ. தேவராசா, உபதலைவர்கள்: எஸ். செந்திநாயகம், ஏ. அருளானந்தம், திருமதி எஸ். ரி. அந்தோனிப்பிள்ளை. செயலாளர்: எஸ். ஐயனார், பொருளாளர்: எஸ். சத்தியாப்பிள்ளை, உபசெயலாளர்கள்: கே. சுப்பிரமணியம், எஸ். சத்தியமூர்த்தி, உபதனாதிகாரி: வே. சண்முகராசா.

மாவட்ட ரீதியில் இருபது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'பற்றுள்ள இளைஞராலேயே நாடு சிறப்புப் பெறும்'

சங்கானை, திங்கள் — "உலகத்திலே பேசப்படுகின்ற மொழிகள் பல. பல மொழிகள் பயின்றவர்களே உண்மையான அறிஞர்கள். பாரதியும் பல மொழிகள் கற்றுணர்ந்தபின் அவற்றுள் தமிழ்மொழியே சிறந்த மொழியென்றார். ஒரு மொழி மாத்திரம் பயின்றவர்கள் அறிஞர்களாகமாட்டார்கள். அவர்கள் கிணற்றுத் தவளைகள்"

இவ்வாறு சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் "பாரதி கண்ட சமுதாயம்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. தில்லைநாதனும் பாரியாரும் கலந்துகொண்டார்கள். நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டியோர்க்கு திருமதி தில்லைநாதன் பரிசில்கள் வழங்கினார்.

முன்னைநாள் யாழ் மாநகர மேயர் திரு. சி. நாகராசா, உறுப்பினர்கள் பூ. சிவசிதம்பரம், க. நடராசா ஆகியோரும் பேசினர். நாடகம் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பருத்தித்துறை திங்கள் — "இன்று ஓர் அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நாட்டில் விளங்கும் ஓரே ஒரு அரசியற் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாகும்" என்று பருத்தித்துறை நகரசபை உபதலைவர் திரு. கே. சேனுதிராசா தும்பளையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திரு. கே. எஸ். சிதம்பரநாதன் தலைமை வகித்தார். திரு. நா. இராசரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

## இ.போ.ச ஊழியருக்கு வீடுவசதி

கோட்டை, திங்கள் — இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமுல்நடத்த விருப்பதாக சபைத்தலைவர் திரு. அனில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

அதிகமான இ. போ. ச ஊழியர்களுக்கு போதிய வீடுவசதியின்மையாலும் சாரதி கொண்டக்டர் முதலியோர் தூர இடங்களில் வசிப்பதால் நேரத்திற்கு வேலைக்கு வரமுடியாமலிருப்பதாலும் அவர்களுக்கு வீட்டுவசதிசெய்து கொடுக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். விவாகமான ஊழியருக்கே முதலில் இவ் வசதி அளிக்கப்படுமாம்.

## கருத்தரங்கு

குருநகர், திங்கள் — சோஷலிசக் கருத்தரங்கொன்றை எதிர்வரும் 3ம் திகதி நடத்துவதற்கு சரவணை முற்போக்கு வாலிபர் பேரவை நடவடிக்கைஎடுத்து வருகிறது. சரவணை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் ஏ. வைத்திலிங்கம், ஏ. கி. துரையப்பா, வ. பொன்னம்பலம் மற்றும் எம்.பிக்களான திருவாளர்கள் எஸ் அருளம்பலம் வி. ஆனந்தசங்கரி, ஏ. தியாகராசா ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

## முத்திரை

கொழும்பு, செவ் — லெனின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படவிருக்கும் 40 சதமுத்திரை இன்று வெளியிடப்படுகிறது. கொழும்புபிரதம தபால் கந்தோரில் நடைபெறவிருக்கும் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் கல்வி அமைச்சர் டாக்டர் மஹ்மூத் கலந்து கொள்ளுவார்.

## தேர்தல்முடிவு

சைகோன், ஆகஸ்ட் 30 — இன்று நடைபெற்று முடிந்த தென்வியட்னாம் கீழ்ச்சட்டசபைக்கான தேர்தல் முடிவுகளின்படி அதிபர் வான் தியூவின் ஆதரவாளர்கள் 30 இடங்களில் வென்றுள்ளனர். இதுவரை 35 முடிவுகள் வெளியாகியுள்ளன. வடபகுதியில் எதிர் தரப்பினர் அதிக முன்னணியில் நிற்பதாகவும் சைகோன் உட்பட பலபட்டினங்களில் அதிபரின் ஆதரவாளர்கள் முன்னணியில் நிற்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## ஒன்றேமுக்கால்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தடுப்புச்சங்க யாழ்ப்பாணக் கிளையினரின் உதவியுடன் இங்கு சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவ முயற்சி எடுக்கும்படியும் புற்றுநோய் தடுப்புச்சங்கத்தினரின் உதவியுடன்தான் தெல்லிப்பளையில் இந்த சிகிச்சை நிலையங்கள் செயல்பட்டுவருவதாகவும் அவர் கூறினர்.

கமிட்டி உறுப்பினரும் வேலணை கிராமசபைத் தலைவருமான திரு க. சதாசிவம் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துப்பேசினார்.

## கைத்தறிப்புள்ளி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

துடன் கைத்தொழில் அமைச்சு இந்தப்புள்ளிவிபரத்தை சேகரிக்கிறது.

சிறுகைத்தொழில்இலாகா இந்த மதிப்பீட்டை இன்று ஆரம்பிக்கிறது. அரசாங்கத்தின் அங்கீகாரம்பெறும் நெசவாலைகளுக்கு நூல் போன்ற சகல உதவிகளையும் அரசு வழங்கி கைத்தொழிலை ஊக்குவிக்கும்.

(சி பீ ஏ)

## திருமணம்

அரசகோன் — சந்திரோதயம்

மணமகன்: திருநிறை செல்வன்
டாக்டர் ஆ. அரசகோன்
(வைத்திய நிலையம், உயிலங்குளம்)
(நவாலியூர் காலஞ்சென்ற டாக்டர் ஆறுமுகம் அவர்கள் புதல்வன்)

மணமகள்: திருநிறை செல்வி
டாக்டர் அ. சந்திரோதயம்
(நாயன்மார்கட்டு வைத்தியர் ஏகாம்பரநாதன் அவர்களின் புதல்வி)

இடம்: மணமகள் இல்லம்.

காலம்: 16-ந் திகதி ஆவணி மாதம் (1-9-71) புதன்கிழமை காலை 6-00 மணிக்கும் 7-00 மணிக்கும் இடையிலுள்ள சுப முகூர்த்த வேளையில் திருமணம் நிகழும்.

உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப்பில்லை).

3002

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 31-ம் திகதிக்கிட்டு வெளியிடப்பட்டது.